முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,

முதன்மை சார்பு நீதிபதி.

**O.S.149/2021**

வா.சா.2 தேதி. 07.07.2026

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முகம்மது சுபாந்திரியோ | த/பெ. | அப்துல்ஹமீது |
| வயது | | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2ம் சாட்சி ஆவேன். வாதி தரப்பில் முதல் சாட்சி விசாரணை செய்யப்பட்டு அதனை நீக்கரவு செய்ய மனு செய்து அந்த மனு அனுமதிக்கப்பட்டு வாதி தரப்பு சாட்சி 2ஆக வாதியின் மகனான நான் முகம்மது சுபாந்திரியோ அழைக்கப்பட்டு அவரின் அடையாள அட்டையை சரிபார்க்கப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்.

எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது. எனது தரப்பு ஆவணங்களாக 10.05.1979 தேதியிட்ட இந்திராணி அம்மாள் வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய சாசனம் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும், 07.08.1974 முஹம்மது சுல்தான் சாஹிப் இந்திராணி அம்மாளுக்கு எழுதிக்கொடுத்த கிரய சாசனம் நகல் **வா.சா.ஆ.2** ஆகவும், 11.06.1965 தேதியிட்ட சின்னம்மாள் முஹமது சுல்தான் சாஹிப் அவர்களுக்கு எழுதிக்கொடுத்த கிரய சாசனம் அசல் **வா.சா.ஆ.3** ஆகவும், 19.04.1961 தேதியிட்ட நடேச படையாச்சி, சின்னம்மாள் அவர்களுக்கு எழுதிக்கொடுத்த கிரய சாசனம் நகல் **வா.சா.ஆ.4** ஆகவும், 18.08.1943 தேதியிட்ட கருப்பாயி நடேச படையாச்சி எழுதிக்கொடுத்த கிரய சாசனம் அசல் **வா.சா.ஆ.5** ஆகவும், 4ம் பிரதிவாதி, வாதி மற்றும் இரு நபர்கள் மீது மயிலாடுதுறை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 287/2018ன் பிராது சார்வு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆகவும், மயிலாடுதுறை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 287/2018ன் எதிர் வழக்குரை அலுவலக நகல் **வா.சா.ஆ.7** ஆகவும், 26.11.2018 தேதியிட்ட 3ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு வழங்கிய கடிதம் நகல் **வா.சா.ஆ.8** ஆகவும், 13.01.2018 தேதியிட்ட குத்தாலம் கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட வாய்மொழி அறிக்கை நகல் **வா.சா.ஆ.9** ஆகவும், 5 முதல் 9 வரையுள்ள பிரதிவாதிகள் 4ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் பதிவு நகல்

**வா.சா.ஆ.10** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

எனது தரப்பு ஆவணங்கள் குறியீடு செய்ய காலஅவகாசம் கேட்டு முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.